Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

தினசரி தமிழ் நாளிதழ்

Madurai Mani Tamil Evening Daily

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House (A Heritage Hotel)
2342971 (3 Lines) 4372900 (4 Lines) 99526 02900 95669 84900
College House

மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 117 | உள்ளூர் - 27.04.2026 | திங்கள் | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com

Madurai Edition | *Vol 55 | * Issue 117 | வெளியூர் - 28.04.2026 | செவ்வாய் | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com

மே மாதத்தில் அதிர்ஷ்டத்தை பெறும் ராசிகள்...?

மின்சாரத்துறையில் 660 காலியிடங்கள்!

மதுரையில் 3 நாட்கள் போக்குவரத்து மாற்றம்!

தமிழக காங்கிரஸுக்கு அடுத்த தலைவர் யார்?

## புதிய ஐ.சி.எப். பேக்டரி தெலுங்கானாவில் மே 9 இல் - மோடியால் திறப்பு!

புதுடெல்லி, ஏப். 27–

பிரதமர் நரேந்திர மோடி மே 9ஆம் தேதி தெலுங்கானா மாநிலம் வரங்கலில் புதிய ரெயில் கோச் தொழிற்சாலையை (ICF) காஜிபேட்டில் தொடங்க உள்ளார். இது ₹500 கோடி மதிப்பில் அமைக்கப்பட்டு, ரெயில் கோச், என்ஜின், மெட்ரோ கூறுகள் தயாரிக்கும் திறன் கொண்டது.





**முக்கிய தகவல்கள்**

இடம்: காஜிபேட், வாரங்கல், தெலுங்கானா

தொடக்க தேதி: மே 9, 2026

திட்ட மதிப்பு: ₹500 கோடி

தொழிற்சாலை பயன்பாடு: LHB (Linke Hofmann Busch) ரெயில் கோச் தயாரிப்பு

EMU (Electric Multiple Unit) கோச் தயாரிப்பு

மெட்ரோ கூறுகள் மற்றும் என்ஜின்கள்

வேலை வாய்ப்பு: ஆயிரக்கணக்கான வேலை வாய்ப்புகள் உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது

ஏற்றுமதி: இந்திய ரெயில்வேக்கு மட்டுமல்லாமல், வெளிநாடுகளுக்கும் ரெயில் கூறுகளை ஏற்றுமதி செய்யும் திறன்

**மோடியின் மே 9 பயண திட்டம்**

வரங்கல்: மம்னூர் விமான நிலையத்தின் அடிக்கல் நாட்டல்

செக்கந்தராபாத்: புதுப்பிக்கப்பட்ட ₹715 கோடி மதிப்பிலான ரெயில் நிலையம் திறப்பு

AIIMS பிபினகர்: இரண்டாம் கட்டம் தொடக்கம்

காஜிபேட்: ரெயில் கோச் தொழிற்சாலை திறப்பு

பொது கூட்டம்: செக்கந்தராபாத் பேரேடு மைதானத்தில் உரையாற்றல்.

## ஈரான் போர்

# மீண்டும் விஸ்வரூபம்? எண்ணெய் கட்டமைப்புகளே அழிந்து போகும்

### 3 நாட்கள் கெடு விடுத்த டிரம்ப்!!

அமெரிக்கா, ஏப். 27–

அமெரிக்கா மற்றும் ஈரான் இடையிலான முதல் கட்ட அமைதிப் பேச்சுவார்த்தை தோல்வி அடைந்ததை அடுத்து இரண்டாம் கட்ட அமைதி பேச்சு வார்த்தை நடப்பதற்கான எந்த ஒரு அறிகுறியும் தென்படவில்லை.

இரு நாடுகளும் தங்களின் நிலைப்பாட்டில் இருந்து கொஞ்சம் கூட விட்டுக் கொடுக்க தயாராக இல்லாததால் பேச்சு வார்த்தை நடக்காமலேயே இருக்கிறது. இதனால் ஹார்முஸ் ஜலசந்தியும் திறக்கப்படாமல் கப்பல் போக்குவரத்தும் தொடர்ந்து தடைப்பட்டு இருக்கிறது. இந்த சூழலில் அமெரிக்க அதிபர் டிரம்ப் ஈரானுக்கு மூன்று நாட்கள் மட்டுமே கெடு விதிப்பதாக தெரிவித்திருக்கிறார்.



ஈரான் இந்த மூன்று நாட்களுக்குள் இறங்கி வரவில்லை என்றால் அவர்கள் தீவிரமான பின்விளைவுகளை எதிர்கொள்ள வேண்டி இருக்கும் என்றும் எண்ணெய் கட்டமைப்புகளே அழிந்து போகும் என்றும் எச்சரித்து இருக்கிறார். ஈரானில் இருந்து கப்பல்களுக்கு கச்சா எண்ணெய் ஏற்றக்கூடிய குழாய்களில் கச்சா எண்ணெய் நிரப்பப்பட்டிருக்கிறது. அவை வெளியே எடுக்கப்படாமல் கடுமையான அழுத்தத்தில் இருக்கின்றன, இன்னும் மூன்று நாட்களில் அவை தானாகவே வெடித்து சிதறும் என டிரம்ப் கூறியிருக்கிறார். அவ்வாறு நடந்தால் ஈரானுக்கு தான் பெரிய நஷ்டம் என்றும் மீண்டும் இது போன்ற குழாய்களை பதிப்பதற்கு அவர்களுக்கு பல ஆண்டுகள் தேவைப்படும் என்றும் குறிப்பிடுகிறார்.

இந்த போரில் அமைதி பேச்சு வார்த்தைக்கு முன் வராமல் இருப்பதால் பெரிய அளவிலான நஷ்டம் ஈரானுக்கு தான் ஏற்பட போகிறது என்றும் அவர் கூறியிருக்கிறார்.

எனவே இந்த மூன்று நாட்களுக்குள் அவர்கள் பேச்சுவார்த்தைக்கு முன்வந்து பழையபடி என்னை சப்ளையை தொடங்கவில்லை என்றால் மிக மோசமான பின்விளைவுகளை ஈரான் சந்திக்க போகிறது என எச்சரிக்கை விடுத்திருக்கிறார். மேலும் ஈரான் நேரடியாகவே எங்களிடம் பேசலாம், எங்களை தொடர்பு கொள்ளலாம் மொபைல் வாயிலாக பேசலாம் அல்லது பாதுகாப்பான பல்வேறு வழிமுறைகள் இருக்கின்றன அவற்றின் வாயிலாக தொடர்பு கொண்டு அமைதிப் பேச்சுவார்த்தைக்கு அவர்களாகவே முன் வரலாம் என கூறியிருக்கிறார். அணு சக்தி திட்டங்களை முழுமையாக கைவிடுகிறோம் என்ற உறுதியை அவர்கள் தந்தால் மட்டுமே இந்த பேச்சு வார்த்தை வெற்றி பெறும் என்றும் டிரம்ப் குறிப்பிட்டு இருக்கிறார்.

## பிட்டி தியாகராயர் பிறந்தநாள் - மு.க.ஸ்டாலின் புகழாரம்!





சென்னை, ஏப். 27–

தமிழக முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியி ட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது;–

ஏப்ரல் 27: நம் வேரான நீதிக்கட்சிக்கு நீர் வார்த்து வளர்த்த தந்தையாம் வெள்ளுடை வேந்தர் பிட்டி தியாகராயரின் பிறந்தநாள். மாநகராட்சி மன்றத் தலைமைப் பொறுப்பில் இருந்து சென்னையின் தொடக்கக்கால வளர்ச்சியில் பெரும்பங்காற்றியவர். எவர் மீதும் வெறுப்புணர்வைக் காட்டாத பண்பிற் சிறந்தவர். பார்ப்பனரல்லாதாரின் உரிமைகள், கல்வி வளர்ச்சி ஆகியவற்றுக்காகத் தியாக ராயர் ஆற்றிய பணிகள்தான் இன்றும் நம்மை இயக்கும் திராவிட மாடல்.

அதன் பயணம் மேலும் உறுதியோடு தொடரும்! இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கொடைக்கானலில் தொடர்கிறது முதல்வர் ஓய்வு: ஆர்வமுடன் சந்தித்த மக்கள்!

கொடைக்கானல்,. ஏப். 27–

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் ஓய்வுக்காக சென்றுள்ள முதல்வர் ஸ்டாலின் இன்று (ஏப்ரல் 27) காலை மனோரத்தினம் சோலை அணையில் நடைபயிற்சி மேற்கொண்டார். அவருடன் சுற்றுலா பயணிகள், பொது மக்கள் செல்பி எடுத்து மகிழ்ந்தனர்.

தமிழக சட்டசபை தேர்தலையொட்டி தீவிர பிரசாரத்தில் ஈடுபட்ட முதல்வர் ஸ்டாலின் ஓய்வெடுக்க மனைவி துர்காவுடன் ஏப்.,25ல் கொடைக்கானலுக்கு சென்று இருக்கிறார்.



அவர் அங்கும் தினமும் காலையில் நடைபயிற்சி மேற்கொண்டு வருகிறார்.

அந்தவகையில் இன்று காலை மனோரத்தினம் சோலை அணையில் நடைபயிற்சி மேற்கொண்டார். நடை பயிற்சியை முடித்து காரில் விடுதிக்கு திரும்பிய முதல்வர் ஸ்டாலின் பொது மக்களிடம் உரையாடினார். முதல்வர் இன்று (ஏப்.,27) அங்குள்ள சில பொழுதுபோக்கு இடங்களை பார்வையிட உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

## பிச்சுகளைக் கொண்டு போதைப்பொருள் கடத்தியதன் பின்னணி: வெளியான அதிர்ச்சி தகவல்கள்!

புதுடெல்லி, ஏப். 27–

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் கைப்பற்றப்பட்ட போதைப் பொருள் கடத்தலின் பின்னணியில் யார் இருக்கின்றார்கள் என்பது குறித்த தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் (26.04.2026)கட்டுநாயக்க விமான நிலையத்தில் பௌத்த பிச்சுகள் 22 பேர் போதைப்பொருள் கடத்தல் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு இருந்தனர்.

கட்டுநாயக்க விமான நிலைய வரலாற்றில், பௌத்தப்பிச்சுகள் கடத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டு கைப்பற்றப்பட்ட அதி கூடிய போதைப்பொருள் தொகை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த போதைப்பொருள் கடத்தல் சம்பவம் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் பல்வேறு விடயங்கள் அம்பலமாகியுள்ளன. இந்த போதைப்பொருள் கடத்தல் நடவடிக்கையின் பின்னணியில் மூன்று பௌத்தப்பிச்சுகள் செயற்பட்டு உள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. சந்தேக நபர்களிடமிருந்து சுமார் 110 கோடி ரூபாய் பெறுமதியான குஷ் போதை பொருள் மற்றும் ஹாஷ் போதை பொருள் என்பன மீட்கப்பட்டுள்ளன.

இந்த பௌத்த பிக்குகள் கடந்த 22 ஆம் திகதி தாய்லாந்தின் பாங்கொக் நகருக்கு சென்றுள்ளனர்.

கஷ்டப் பிரதேச விகாரைகளில் உள்ள இளம் பௌத்த பிச்சுகளை தெரிந்தெடுத்து தாய்லாந்துக்கான மத வழிபாட்டு யாத்திரை என்ற போர்வையில் போதைப் பொருள் கடத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த போதைப்பொருள் கடத்தல் நடவடிக்கைகளை மூன்று பௌத்தப்பிச்சுகள் வழி நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த பௌத்தப்பிச்சுகள் தாய்லாந்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு காவி உடைகளை களைந்து பல்வேறு களியாட்ட நிகழ்வு களில் பங்கேற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அவர்களுடைய அலைபேசிகளை பார்க்கும் போது இந்த விபரங்கள் தெரிய வந்துள்ளன. சில பௌத்தப்பிச்சுகள் பெண்களுடன் தகாத தொடர்பு பேணியுள்ளமையும் தெரியவந்துள்ளது. மூன்று நாட்கள் அங்கு தங்கி இருந்து பல்வேறு களியாட் டங்களில் இந்த பௌத் தப்பிச்சுகள் ஈடுபட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.



## மும்பை-புனே விரைவுச்சாலையின் 'விடுபட்ட இணைப்பு' திறப்பு!

மும்பை, ஏப். 27–

மும்பை–புனே எக்ஸ்பிரஸ் வேயின் "மிஸ்ஸிங் லிங்க்" திட்டம் மே 1 அன்று திறக்கப்பட உள்ளது. இது 8 வழிச்சாலையாக விரிவாக்கப்படுவதால், பயண நேரம் 2030 நிமிடங்கள் குறையும். மே 1 அன்று பிரதமர் மோடி திறப்பார்

'தி மிஸ்ஸிங் லிங்க்' திட்டமானது எம்.எஸ்.ஆர்.டி.சி. யால் கட்டப்பட்டு வருகிறது. விரைவுச்சாலையின் ஒரு பகுதியை நேராக்குவதே இதன் முக்கிய நோக்கமாகும்.



திட்டத்தின் முக்கிய கூறுகள்:

கோபோலி மற்றும் கண்டாலா இடையே ஒரு புதிய சுரங்கப்பாதை மற்றும் மேம்பால வழித்தடம்

தற்போதைய மலைப்பாதைப் பிரிவில் உள்ள கூர்மையான வளைவுகள் மற்றும் செங்குத்தான சரிவுகளைத் தவிர்த்துச் செல்லுதல்.

தற்போதுள்ள ஆறு வழி விரைவுச்சாலை அமைப்பில் ஒருங்கிணைக்கப்பட்ட நான்கு வழி வடிவமைப்பு

நீண்ட சுரங்கங்கள் மற்றும் உயரமான பாலங்கள் உள்ளிட்ட பல பொறியியல் கட்டமைப்புகள்

முக்கிய தகவல்கள்

திட்டம்: மும்பைபுனே எக்ஸ்பிரஸ் வே "மிஸ்ஸிங் லிங்க்"

நீளம்: 13.3 கி.மீ (கோபோலி குஸ்காவ்)

செலவு: ₹6,700 கோடி

## மாற்றுத்திறனாளிகள் ரயில்களில் உள்ள சிறப்பு பெட்டிகளில் பயணிக்க சலுகை!




சென்னை, ஏப். 27–

மாற்றுத் திறனாளிகள் ரயில்களில் உள்ள சிறப்பு பெட்டிகளில் பயணிக்க சலுகையை பயன்படுத்தலாம் என இந்தியன் ரயில்வே தெரிவித்துள்ளது.

ரயில்களில் மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு பெட்டிகளில் (திவ்யங்ஜன் பெட்டிகளில்) பயணிக்க, இனி, யுடிஐடி என்னும் தேசிய தனித்துவமான அடையாள அட்டை பயன்படுத்தலாம் என, ரயில்வே வாரியம் அறிவித்துள்ளது.

தலையங்கம்
மதுரை மணி
திங்கட்கிழமை 27.04.2026
விசுவாவசு தமிழ் வருடம்
சித்திரை மாதம் 14-ம் தேதி

## IT துறையின் பொற்காலம் முடிகிறதா?



இந்தியாவில் ஐடி வேலை என்றாலே தனி மவுசு உண்டு. ஐடி வேலை கிடைத்துவிட்டால் வாழ்க்கை செட்டில், வெளிநாடுகளுக்கு செல்லலாம் , கை நிறைய சம்பாதிக்கலாம் என்பது தான் முன்பு இருந்த நிலைமை. ஆனால் கடந்த சில ஆண்டுகளாக அது அப்படியே தலைகீழாக மாறிவிட்டது. ஐடி துறையில் வேலை கிடைப்பதே குதிரை கொம்பாக இருக்கிறது. அப்படி கிடைத்தாலும் அந்த வேலை எத்தனை காலம் நீடிக்கும் என சொல்ல முடியாது. எந்த நேரமும் நீங்கள் லே ஆஃப் செய்யப்படலாம் என்பதே நிலைமை. ஐடி துறையை பொறுத்தவரை ஊழியர்கள் தலை மீது எப்போதுமே லே ஆஃப் என்ற கத்தி தொங்கி கொண்டு இருக்கிறது. இதனால் ஐடியில் வேலை பார்ப்பவர்கள் மட்டுமின்றி ஐடி வேலைக்காக கல்லூரி படிப்பை தேர்வு செய்த மாணவர்களும் பெரும் கவலையில் உள்ளனர். இந்தியாவின் முன்னணி ஐடி நிறுவனங்களான டிசிஎஸ் ( TCS), இன்போசிஸ் (Infosys) , ஹெச்சிஎல் டெக் ( HCLTech) , விப்ரோ ( Wipro )மற்றும் டெக் மகேந்திரா ( Tech Mahin–dra) ஆகியவை 2026ஆம் ஆம் நிதியாண்டு அதாவது மார்ச் 31 உடன் முடிந்த நிதியாண்டில் தங்களின் ஊழியர்கள் எண்ணிக்கையை வெகுவாக குறைத்துள்ளது வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

2026ஆம் நிதியாண்டில், இந்தியாவின் முதல் 5 ஐடி நிறுவனங்களின் மொத்த பணியாளர் எண்ணிக்கையில் 7,389 பேர் குறைந்துள்ளனர். 2025ஆம் ஆண்டில் மொத்தமாக 12,718 பேருக்கு வேலைவாய்ப்பு தந்த நிலையில் 2026ஆம் ஆண்டில் அது மைனஸ் 7,389 பேராக மாறியுள்ளது. குறிப்பாக டிசிஎஸ் நிறுவனம் தான் இதில் பெரும்பாலான ஊழியர்களை வீட்டிற்கு அனுப்பியுள்ளது. 2025ஆம் ஆண்டில் 6,400 பேருக்கு வேலை கொடுத்த டிசிஎஸ், 2026ஆம் நிதியாண்டில் 23,460 பேரை வீட்டுக்கு அனுப்பியுள்ளது. இது தான் ஒட்டுமொத்தமாகவே ஐடி துறை ஊழியர்களின் எண்ணிக்கை குறைய காரணமாகியுள்ளது.

கடந்த ஆண்டு ஜூன் மாதம் டிசிஎஸ் நிறுவனம் திடீரென தங்கள் ஊழியர்களில் 2% பேரை பணிநீக்கம் செய்வதாக அறிவித்தது. முதலில் கூறப்பட்ட 12,000 பேர் தான் ஆனால் உண்மையில் நிறுவனத்தை விட்டு வெளியேறிவர்கள் எண்ணிக்கை 23,460 ஆகும். அதே வேளையில் இன்போசிஸ் 5,016, ஹெச்சிஎல் டெக் 3,000 , விப்ரோ 8,810 பேருக்கு புதிதாக வேலைவாய்ப்பு தந்துள்ளன. ஐடி நிறுவனங்கள் தற்போது AI மற்றும் ஆட்டோமேஷன் தொழில்நுட்பங்களை பெருமளவு பயன்படுத்த தொடங்கியுள்ளன. இதனால் வழக்கமான பணிகளுக்கு குறைவான ஊழியர்களே தேவைப்படுகிறார்கள். அதுமட்டுமில்லாமல் உலகளாவிய பொருளாதார மந்தநிலை காரணமாக, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய வாடிக்கையாளர்கள் புதிய ஐடி திட்டங்களுக்கான செலவுகளைக் குறைத்துள்ளனர். கொரோனா காலத்திற்குப் பிறகு அதிகப்படியான ஊழியர்களை நிறுவனங்கள் ஏற்கனவே பணியமர்த்தியிருந்தன. தற்போது புதியவர்களைச் சேர்ப்பதை விட, ஏற்கனவே உள்ள ஊழியர்களை முழுமையாகப் பயன்படுத்த நிறுவனங்கள் முன்னுரிமை அளிக்கின்றன. இவை தான் ஐடி நிறுவன வேலைகள் சரிய முக்கிய காரணம்.

நாட்டின் முன்னணி ஐடி நிறுவனங்கள் புதிய பட்டதாரிகளைப் பணியமர்த்துவதை வெகுவாக குறைத்துள்ளது ஃபிரஸ்ஸர்களுக்கு கவலை தந்துள்ளது. தற்போது நிறுவனங்கள் ‘எண்ணிக்கையை’ விட ‘திறமைக்கே’ (Specialized skills) முக்கியத்துவம் அளிக்கின்றன. AI, Cloud Computing, மற்றும் Cybersecu–rity போன்ற துறைகளில் நிபுணத்துவம் பெற்றவர்களுக்கு மட்டுமே அதிக வாய்ப்புகள் உள்ளதால் அதில் திறமையை மேம்படுத்தி கொள்வது தான் வேலை பெற்று தரும்.

## தனியார் தங்கும் விடுதிகள் இனி காவல்துறையின் நேரடி கண்காணிப்பில்..!



சென்னை, ஏப். 27–

தமிழகத்தில் தனியார் தங்கும் விடுதிகளில் கொலை, தற்கொலை மற்றும் போதைப்பொருள் தொடர்பான குற்றச்சம்பவங்கள் அதிகரித்து வருவதையடுத்து, சென்னை காவல்துறை புதிய கடுமையான கட்டுப்பாடுகளை அமல்படுத்தியுள்ளது. சமீபத்தில் சென்னை பெரியமேடு பகுதியில் உள்ள ஒரு விடுதியில் இளம்பெண் ஒருவர் கழுத்தறுக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் பெரும் அதிர்வலை ஏற்படுத்தியது. இதையடுத்து விடுதிகளில் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்த போலீசார் முடிவு செய்துள்ளனர். புதிய உத்தரவின்படி, விடுதிகளில் தங்க வருவோரின் பெயர், முகவரி, ஆதார் எண், மொபைல் எண் உள்ளிட்ட முழுமையான அடையாள விவரங்களை கட்டாயமாக பதிவு செய்ய வேண்டும். இந்த பதிவேடுகளை காவல்துறை அதிகாரிகள் தினமும் காலை மற்றும் மாலை நேரங்களில் நேரில் வந்து ஆய்வு செய்ய உள்ளனர். மேலும், இரண்டு நாட்களுக்கு மேல் தங்கும் நபர்கள் அல்லது வெளிமாநிலங்களில் இருந்து வருவோர் மீது சந்தேகம் ஏற்பட்டால் உடனடியாக அருகிலுள்ள காவல் நிலையத்திற்கு தகவல் வழங்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

விடுதி அறைகள் போதைப்பொருள் அல்லது சட்டவிரோத செயல்களுக்கு பயன்படுத்தப்படுகிறதா என்பதை கண்காணிக்கும் பொறுப்பும் விடுதி உரிமையாளர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. தடை செய்யப்பட்ட பொருட்கள் பயன்படுத்தப்படுவதாக சந்தேகம் ஏற்பட்டால் உடனடியாக போலீசாருக்கு தகவல் தெரிவிக்க வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

சென்னை மாநகரில் விடுதிகள் இனி நேரடி போலீஸ் கண்காணிப்பில் செயல்படும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. விதிமுறைகளை மீறும் விடுதிகளின் மீது கடுமையான நடவடிக்கை மற்றும் உரிமம் ரத்து வரை நடவடிக்கை எடுக்கப்படும் என போலீசார் எச்சரித்துள்ளனர். இந்த நடவடிக்கைகள் விடுதி உரிமையாளர்களுக்கு சில நடைமுறை சிரமங்களை ஏற்படுத்தினாலும், பொது மக்களின் பாதுகாப்புக்காக அவை அவசியம் என காவல்துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழக காங்கிரஸுக்கு அடுத்த தலைவர் யார்?




சென்னை, ஏப். 27–

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுகள் வெளியான ஓரிரு தினங்களில் தமிழக காங்கிரஸுக்கு புதிய தலைவர் அறிவிக்கப்படுவார் என்கிற தகவல் வெளியாகியிருப்பதால் சத்தியமூர்த்தி பவன் அனல் தகிக்கிறது.

கடந்த 2019–ம் ஆண்டு பிப்ரவரியில் தமிழக காங்கிரஸ் தலைவராக கே.எஸ்.அழகிரி நியமனம் செய்யப்பட்டார். காங்கிரஸ் கட்சியின் விதிமுறைகளின்படி அவரது பதவிக்காலம் 2022–ம் ஆண்டு பிப்ரவரியிலேயே நிறைவடைந்து விட்டது. அழகிரி மீது ஏராளமான புகார்கள் தலைமைக்கு சென்றபோதும், அகில இந்திய தலைமையில் நிலவிய குழப்பத்தால் தமிழக காங்கிரஸுக்கு புதிய தலைவர் நியமிப்பதில் தாமதம் ஏற்பட்டது.இதற்கிடையில் அகில இந்திய காங்கிரஸ் தலைவர் கார்கே சிபாரிசில் கடந்த 2024–ல் தலைவர் பதவியை தனதாக்கிக் கொண்டார், செல்வப்பெருந்தகை. தொண்டர்களின் விருப்ப த்துக்கு மாறாக செல்வப்பெ ருந்தகை செயல்படுவதாக மிகக்குறுகிய காலத்திலேயே சத்தியமூர்த்தி பவனில் இருந்து டெல்லிக்கு புகார்கள் பறக்க தொடங்கின. ஆனாலும் கார்கேவின் ஆதரவு இருந்ததால் அவரது பதவிக்கு எந்த சிக்கலும் இல்லை. இந்நிலையில், தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுகள் வெளியானதும் செல்வப்பெருந்தகையை மாற்ற அகில இந்திய தலைமை முடிவு செய்திருப்பதாக தகவல் வெளியாகியிருக்கிறது. இதுகுறித்து சத்தியமூர்த்தி பவன் வட்டாரங்கள் கூறியதாவது: நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில் குறைந்தபட்சம் 35 தொகுதிகளிலாவது காங்கிரஸ் போட்டியிட வேண்டும் என ராகுல் காந்தி விரும்பினார். ராகுல் காந்தி வருத்தம்: ஆனால் ப.சிதம்பரத்தை கூட்டணி பேச்சு வார்த்தைக்குள் கொண்டு வந்து, வெறும் 28 இடங்களுக்கு அகில இந்திய தலைமையை ஒப்புக்கொள்ள வைத்தார் செல்வப்பெருந்தகை. இதில் ராகுல் காந்திக்குத் தனிப்பட்ட முறையில் பெரிய வருத்தம் உண்டு. தொடர்ந்து வேட்பாளர் தேர்விலும் தனது ஆதரவாளர்களுக்கே செல்வப்பெருந்தகை முக்கியத்துவம் கொடுத்தது பெரும் சர்ச்சையானது. இதன் உச்சமாக, வேட்பாளர்கள் தேர்வில் ‘பணம் விளையாடியதாக’ முன்னாள் தமிழக மகளிர் காங்கிரஸ் தலைவர் ஹசீனா சையத் கொடுத்த அதிரடி பேட்டி டெல்லி மேலிடத்தை முகம் சுளிக்க வைத்தது.

மேலும், பிரச்சாரக் கூட்டம் ஒன்றில் ராகுல் காந்தியின் பேச்சைத் தவறாக மொழி பெயர்த்தது என செல்வப்பெருந்தகை தொடர்ந்து சர்ச்சைகளில் சிக்கினார். இதையெல்லாம் கவனத்தில் கொண்டுதான் புதிய தலைவரை நியமிக்க டெல்லி முடிவுக்கு வந்திருக்கிறது. இதைப் புரிந்துகொண்டே, சமீபத்தில் ‘தலைவர் பதவியில் இருந்து விலகத் தயார்’ என செல்வப்பெருந்தகை பேட்டியளித்திருந்தார். தற்போது தலைவர் பதவியைப் பிடிக்க கார்த்தி சிதம்பரம், ஜோதிமணி, மாணிக்கம் தாகூர், செல்லகுமார், ராஜேஷ்குமார் ஆகியோர் தீவிரமாக முயன்று வருகிறார்கள். முன்னாள் தலைவர்கள் திருநாவுக்கரசர், கே.எஸ் அழகிரி, தங்கபாலு போன்றவர்களும் வாய்ப்பை எதிர்பார்த்து காய் நகர்த்தி வருகிறார்கள்.

காங். தலைமை உறுதி: ஆனால். ஏற்கெனவே மாநிலத் தலைவர் பதவியில் இல்லாத புதியவர்களை நியமிக்கவே டெல்லி தலைமை விரும்புகிறது. போட்டியில் யாருக்கு தலைவர் பதவி கிடைக்குமோ தெரியாது. ஆனால், செல்வப்பெருந்தகையை மாற்றிவிட்டு புதிய தலைவரை நியமிக்க வேண்டும் என்பதில் அகில இந்திய காங்கிரஸ் தலைமை மிகவும் உறுதியாக இருக்கிறது. இவ்வாறு அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

## நீட் தேர்வர்கள், ஆதார் பயோமெட்ரிக் புதுப்பித்து வைத்துக்கொள்ள தேசிய தேர்வு முகமை அறிவுறுத்தல்..!




புதுடெல்லி, ஏப். 27–

இளநிலை மருத்துவப் படிப்புக்கான தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு (NEET UG),மே 3ந்தேதி பிற்பகல் நீட் தேர்வு நாடு முழுவதும் நடைபெற உள்ளது. இந்த ஆண்டு நீட்–யுஜி (NEET UG) தேர்வு 5,432 மையங்களில் நடைபெற உள்ளது. தேர்வு மையத்தில் சுமூகமான பயோமெட்ரிக் சரிபார்க்கப்படும் என்று குறிப்பிட்டுள்ள தேர்வு வாரியம் “தேவைப்பட்டால், தேர்வர்கள் தங்களுக்கு அருகிலுள்ள ஆதார் சேவா மையத்திற்குச் சென்று முன்கூட்டியே தங்களது விவரங்களைப் புதுப்பித்துக் கொள்ளலாம்” என்றும் அந்த பதிவில் தெரிவித்துள்ளது.


இது குறித்து வெளியிட்டுள்ள பதிவில், யு.ஐ.டி.ஏ.ஐ (UIDAI) வழிகாட்டுதல்களின்படி, ஒரு குழந்தைக்கு 15வயதுபூர்த்தியாகும்போது ஆதார் பயோமெட்ரிக் விவரங்களைப் புதுப்பிப்பது கட்டாயமாகும். 15 முதல் 17 வயதுக்குட்பட்டவர்களுக்கு இந்தப் புதுப்பித்தல் செயல்முறை முற்றிலும் இலவசமாகும். தேர்வர்கள் தங்களுக்கு அருகிலுள்ள ஆதார் பதிவு மையங்களை uidai.gov.in என்ற அதிகாரப்பூர்வ இணையதளம் மூலம் கண்டறியலாம்.

பெயர், பிறந்த தேதி, பாலினம், புகைப்படம், முகவரி மற்றும் பயோமெட்ரிக் தகவல்கள் துல்லியமாக இருப்பது அவசியம். இது பதிவு அல்லது சரிபார்ப்புச் செயல்பாட்டின் போது ஏற்படக்கூடிய குளறுபடிகளைத் தவிர்க்க உதவும். ஆதார் தவிர, மாற்றுத்திறனாளிகளுக்கான யு.டி.ஐ.டீ (UDID) அட்டை மற்றும் சாதிச் சான்றிதழ்கள் (EWS/SC/ST/OBC–NCL) போன்றவை செல்லுபடியாகும் நிலையில் இருப்பதையும், புதுப்பிக்கப்பட்டிருப்பதையும் தேர்வர்கள் உறுதி செய்ய வேண்டும். நீட் யுஜி 2026 தேர்வுக்கான ஹால் டிக்கெட் ஏப்ரல் 27, காலை 10 மணிக்கு வெளியிடப்படும் என்று தேசிய தேர்வு முகமை அறிவித்துள்ளது.

தேர்வர்கள் தங்களது ஹால் டிக்கெட்டை neet.nta.nic.in என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். தேர்வு மையத்திற்கு ஹால் டிக்கெட் கொண்டு வருவது கட்டாயம்; அது இல்லையெனில் தேர்வர்கள் தேர்வு அறைக்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். தேர்வுக்கு முந்தைய கடைசி ஞாயிற்றுக்கிழமையை மாதிரித் தேர்வுகள் எழுத அல்லது பாடங்களைத் திருப்புதல் செய்யப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். நீட் யுஜி 2026 தேர்வு மே 3 அன்று நாடு முழுவதும் 552 நகரங்களிலும், வெளிநாடுகளில் 14 நகரங்களிலும் நடைபெற உள்ளது.

## சினிமா துளிகள்..!

### வெளியானது டொவினோ தாமஸ் –ன் ‘அதிரடி’ படத்தின் ரிலீஸ் தேதி..!




அருண் அனிருத்தன் இயக்கத்தில் உருவாகி வரும் ‘அதிரடி’ திரைப்படம் குறித்து முக்கியமான அப்டேட் வெளியாகியுள்ளது. டொவினோ தாமஸ் மற்றும் பசில் ஜோசஃப் இணைந்து நடித்துள்ள இந்த படம், வரும் மே 14ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகும் என படக்குழு அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.


இந்த அறிவிப்பு வெளியானதிலிருந்து ரசிகர்களிடையே பெரும் எதிர்பார்ப்பு உருவாகியுள்ளது. டொவினோ தாமஸ் தொடர்ந்து வித்தியாசமான கதைகளை தேர்ந்தெடுத்து நடித்து வருகிறார்.

## பழனி முருகன் கோவிலுக்கு புதிய பேட்டரி பஸ்!




பழனி, ஏப். 27–

பழனி முருகன் கோவிலுக்கு பக்தர்கள் செல்ல வசதியாக பாண்டிச்சேரி சக்தி முருகன் கம்பெனி சார்பில் நன்கொடையாக 2 வதாக பேட்டரி பஸ் வழங்கப்பட்டது. பழனி முருகன் கோவிலில் ஏற்கனவே 37 எலக்ட்ரிக் வாகனங்கள் உள்ளது. இதற்கான நிகழ்ச்சி ஏற்பாடுகளை கோயில் நிர்வாக அதிகாரி மாரிமுத்து செய்திருந்தார். இந்நிகழ்ச்சியில் திருக்கோயில் உதவி பொறியாளர் மோகன்ராஜ், பாண்டிச்சேரி சக்தி முருகன் கம்பெனி உரிமையாளர்கள் பங்கேற்றனர்.



## மே மாதத்தில் நல்ல அதிர்ஷ்டத்தை பெறப் போகும் ராசிகள் இவைதான்..! உங்கள் ராசி என்ன..?




மே மாதம் சில ராசிகளுக்கு நற்பலன்களைக் கொண்டுவரும் என்று ஜோதிட சாஸ்திரம் கூறுகிறது. இம்மாதத்தில் பல கிரகங்கள் இடப்பெயர்ச்சி அடையவிருப்பதால், அவை பன்னிரண்டு ராசிகளின் மீதும் தாக்கத்தை ஏற்படுத்தும். இருப்பினும், மே மாதம் முழுவதும் சில ராசிக்காரர்கள் நிதி மற்றும் உடல்நலம் சார்ந்த சிக்கல்களைச் சந்திக்க நேரிடும் வேளையில், வேறு சில ராசிக்காரர்களுக்கு இது மிகச் சிறப்பான காலமாக அமையவுள்ளது. அந்த ராசிகள் எவை என்பதை இப்போது பார்க்கலாம்..


**மிதுனம்:** மே மாதம் முழுவதும் மிதுன ராசிக்காரர்களுக்கு அதிர்ஷ்டம் நிறைந்ததாக அமையும் என்று கூறப்படுகிறது. நிதி மற்றும் உடல்நலம் சார்ந்த அனைத்து வகையிலும் இவர்களுக்குச் சிறப்பான நிலை இருக்கும். எதிர்பாராத மாற்றங்கள் சில நிகழக்கூடும். அதுமட்டுமின்றி, வெளிநாடுகளுக்குப் பயணம் மேற்கொள்ள விரும்புவோருக்கும் இது மிகவும் சாதகமான காலமாக அமையும். பயணங்கள் மூலம் எதிர்பாராத நன்மைகள் இவர்களுக்குக் கிட்டும்.

**கும்பம்:** மே மாதம் முழுவதும் கும்ப ராசிக்காரர்கள் நிதி ரீதியாகப் பெரும் வெற்றியைப் பெறுவார்கள். இது தவிர, இந்த ராசிக்காரர்களுக்கு அதிகபட்ச லாபம் கிடைக்க வாய்ப்புள்ளது. இவர்களின் உத்தியோகத்திலும் நல்ல முன்னேற்றம் காணப்படும். மாணவர்கள் தேர்வுகளில் சிறந்த தரவரிசைகளைப் பெறுவார்கள். கும்ப ராசிக்காரர்கள் மே மாதம் முழுவதையும் மிகுந்த மகிழ்ச்சியுடன் கழிப்பார்கள். குடும்பத்தினருடன் இணைந்து புனித யாத்திரைகள் மேற்கொள்ளும் வாய்ப்பும் உள்ளது. வீட்டில் எப்போதும் மகிழ்ச்சியான சூழலே நிலவும்.

**விருச்சிகம்:** கிரகங்களின் இடப்பெயர்ச்சியின் காரணமாக, விருச்சிக ராசிக்காரர்களின் குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழல் நிலவும். இவர்களின் வருமானம் இரட்டிப்பாகும். அத்தியாவசியத் தேவைகளுக்குத் தேவையான பணம் தடையின்றி வந்து சேரும். நிதி சார்ந்த சிக்கல்கள் அனைத்தும் முற்றிலுமாக நீங்கும். இந்த ராசிக்காரர்களுக்குப் புதிய வாகனம் வாங்கும் வாய்ப்பும் உள்ளது. இவர்கள் மேற்கொள்ளும் அனைத்துச் செயல்களும் இவர்களுக்குச் சாதகமாகவே அமையும்.

**தனுசு:** தனுசு ராசிக்காரர்களுக்கு மிகச் சிறப்பான நன்மைகள் வந்து சேரும். நீண்ட காலமாகத் தங்கம் வாங்க வேண்டும் என்று ஆசைப்பட்டு வந்தவர்களின் விருப்பம் இம்மாதம் நிறைவேறும். கையில் பணம் புழங்கும் வேளையில், இந்த ராசிக்காரர்கள் தங்கம் வாங்குவார்கள். இவர்களின் வருமானமும் கணிசமாக உயரும். கலைத்துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு அதிகப்படியான லாபம் கிடைக்க வாய்ப்புள்ளது.

## கூடங்குளத்தில் 3-வது அணு உலை சோதனை ஓட்டம் தொடக்கம்!



நெல்லை, ஏப். 27–

நெல்லை மாவட்டம் கூடங்குளத்தில் உள்ள அணுமின் நிலையத்தில் ரஷிய நாட்டின் நிதி உதவியுடன் தலா ஆயிரம் மெகாவாட் மின் உற்பத்தி திறன் கொண்ட இரண்டு அணு உலைகள் அமைக்கப்பட்டு மின் உற்பத்தி நடைபெற்று வருகிறது.

இந்த இரண்டு அணு உலைகளில் இருந்தும் தமிழகத்திற்கு 1,152 மெகாவாட் மின் உற்பத்தி கிடைக்கிறது. தொடர்ந்து கூடங்குளத்தில் 3–வது அணு உலை அமைக்கும் பணி நடைபெற்று வந்தது. அந்த பணிகள் நிறைவடைந்த நிலையில், சோதனை முனையில் அணு உலையை இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வந்தது.

அதன்படி கூடங்குளம் 3–வது அணு உலை சோதனை ஓட்டம் இன்று தொடங்கியுள்ளது. அணு உலைக்குள் நீர் பாய்ச்சும் பணி வெற்றிகரமாக தொடங்கியதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். தொடர்ந்து அடுத்தகட்ட பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன.

## விமான கட்டணம் பல மடங்கு உயர்வு!



சென்னை, ஏப். 27–

தற்போது விமானங்களில் பயணம் செய்வோருக்கு விமானகட்டணம் பல மடங்காக உயர்ந்துள்ளதால் பொதுமக்கள் கடும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர். இருந்தாலும் விமானங்களில் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து காணப்படுகிறது. இதனால் பயண கட்டணங்களை விமானங்கள் நேற்றிரவு முதல் உயர்த்தியுள்ளது.

இதன்படி உயர்த்தப்பட்ட கட்டண விவரங்கள் பின்வருமாறு:–

மதுரை–சென்னை வழக்கமான கட்டணம் ரூ5.099, உயர்த்தப்பட்ட கட்டணம் ரூ.32,508

தூத்துக்குடி – சென்னை வழக்கமான கட்டணம் ரூ5,354, உயர்த்தப்பட்ட கட்டணம் ரூ.17,089

திருச்சி – சென்னை வழக்கமான கட்டணம் ரூ4,551 உயர்த்தப்பட்ட கட்டணம் ரூ.14,310

கோவை – சென்னை வழக்கமான கட்டணம் ரூ.4,634உயர்த்தப்பட்ட கட்டணம் ரூ.11,149

# நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



## கோடை வெப்பத்தை எதிர்கொள்வதற்கான ஆரோக்கிய குறிப்புக்கள் இதோ!



ஒவ்வொரு வருடமும் மே மாதம் வருகிறது என்றாலே நம் அனைவருக்கும் முதலில் நினைவிற்கு வருவது அந்த மாதம் அக்னி நட்சத்திர காலம் என்பது தான். இயற்கையின் கால வெள்ளத்தில் கோடை காலமும் ஒன்று என்றாலும், ஒவ்வொரு வருடமும் இந்த அக்னி நட்சத்திர காலத்தில் வெப்பமானது அதிகரித்தபடியே செல்கிறது. இக்காலத்தில் நாம் அனைவரும் முறையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற் கொள்வதால் கோடை காலத்தில் ஏற்படுகின்ற உடல் உபாதைகள், நோய்கள் போன்றவற்றில் இருந்து நம்மை காத்துக் கொள்ளலாம். கடுமையான வெயில் சுட்டெரிக்கும் இக்காலத்தில் நாம் கடைபிடிக்க வேண்டிய விதிகள் என்ன என்பதை இங்கே தெரிந்து கொள்ளலாம்.

கோடை வெயில் காலத்தில் வியர்வை அதிகம் ஏற்பட்டு உடலில் இருந்து அதிகம் நீர் சத்து வெளியேறுகிறது. எனவே இத்தகைய காலங்களில் செயற்கை இழைகளால் செய்யப்பட்ட ஆடைகளைத் தவிர்த்து, தூய்மையான பருத்தி ஆடைகளை அணிந்து கொள்வது நல்லது. பருத்தி ஆடைகள் உடலுக்கு காற்றோட்டத்தை தந்து உடல் அதிக வெப்பம் அடையாமல் தடுக்கிறது. வெயில் நேரத்தில் வெளியில் செல்ல வேண்டிய கட்டாயத்தில் இருப்பவர்கள் தலைக்கு வெள்ளை நிறத்திலான தொப்பி அணிந்து கொள்ள வேண்டும் அல்லது பருத்தியால் ஆன ஒரு மிகப் பெரிய துண்டை எடுத்து, தலை மற்றும் பின் கழுத்து பகுதியை மறைக்கும் வகையில் கட்டிக்கொள்ள வேண்டும். இது தலை அதிகம் உஷ்ணமடையாமல் பாதுகாக்கும்.

வெயில் காலம் வந்தாலே ஆங்கங்கே சாலையோரங்களில் குளிர் கண்ணாடிகள் விற்கும் கடைகள் முளைப்பதை நாம் காணலாம். சாலையோரங்களில் விற்கப்படும் இத்தகைய குறைந்த விலை கண்ணாடிகளை வாங்கி அணிந்து கொள்வதை முற்றிலும் தவிர்க்க வேண்டும். வெயிலில் இருந்து கண்களை பாதுகாக்க ஒரு நல்ல கண் மருத்துவரிடம் சென்று கண்களை பரிசோதித்து, உங்கள் கண்களின் தன்மைக்கு ஏற்ப வெயிலின் தீமையான கதிர்களை தடுக்கும் ஆற்றல் கொண்ட தரமான குளிர் கண்ணாடிகளை வாங்கி அணிய வேண்டும்.

வெயில் காலங்களில் சிலர் வெளியில் நன்கு நடமாடி விட்டு வீட்டிற்கு வந்த உடனே குளிர் சாதன பெட்டியில் இருக்கும் குளிர்ந்த நீரை உடனே குடிக்கும் வாடிக்கை கொண்டிருக்கின்றனர். இது உடலுக்கு தீங்கு விளைவிக்கின்ற ஒரு செயலாகும். அதற்கு மாறாக மண்பானை தண்ணீர் அருந்துவது உடலுக்கு நன்மை ஏற்படுத்தும்.

கடுமையான வெயில் அடிக்கின்ற அக்னி நட்சத்திர காலத்தில் வியர்வை அதிகம் ஏற்படுவதால் உடலில் நீர் இழப்பு ஏற்படுகிறது. இது உடலுக்கு பல தீங்குகளை விளைவிக்கும். சமயங்களில் உயிருக்கே ஆபத்தை ஏற்படுத்தும். எனவே இக்காலங்களில் அடிக்கடி பழங்கள் சாப்பிடுவது, சுத்தமான நீரை அடிக்கடி அருந்துவதன் மூலம் உடலில் எப்போதும் நீர் சத்து இருப்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

கோடைக்காலங்களில் காரம், புளிப்பு போன்றவை அதிகமாக சேர்க்கப்பட்ட உணவுகளையும், மாமிச உணவுகளையும், மாவுச்சத்து நிறைந்த உணவுகள் போன்றவற்றை அதிகம் சாப்பிடுவதை தவிர்க்க வேண்டும். இத்தகைய உணவுகள் வெயில் காலங்களில் பலருக்கு செரிமானமின்மை, மலச்சிக்கல் மற்றும் இன்ன பிற வயிற்று உபாதைகளை ஏற்படுத்தும். நார்ச்சத்து அதிகம் நிறைந்த காய்கறிகள், உணவுகளை கோடைகாலங்களில் அதிகம் சாப்பிட வேண்டும்.

சிலர் செய்யும் வேலை நிமித்தமாக இரவில் நெடுநேரம் கண் விழிக்கும் நிலை ஏற்படுகிறது. கோடைக் காலங்களில் பகல் நேரத்தில் இருக்கும் வெப்பம் உடலை சூடு படுத்துவதோடு, இரவிலும் நீண்ட நேரம் கண் விழித்து வேலை செய்வதால் உடல் மேலும் உஷ்ணமடைந்து பல நோய்கள் ஏற்படுவதற்கு வழிவகுக்கும். எனவே கோடை காலங்களில் சீக்கிரமாகத் தூங்கி, அதிகாலையில் எழுவது உடலுக்கும் மனதுக்கும் உற்சாகத்தையும் ஆரோக்கியத்தையும் தரும். உடற்பயிற்சி, நடைப்பயிற்சி போன்றவற்றை செய்பவர்கள் கோடைக்காலங்களில் அதிகாலையிலேயே எழுந்து இத்தகைய பயிற்சிகளை மேற்கொள்வது உடலுக்கும் மனதிற்கும் உற்சாகத்தை தருகிறது. சூரிய ஒளி வருவதற்கு முன்பே இத்தகைய பயிற்சிகளை செய்வதால் உடல் அதிக உஷ்ணம் அடைவதையும், களைப்ப டைவதையும் தடுக்கிறது. வெயில் காலங்களில் உடலின் வெப்பத்தைப் போக்க ஆண்களும், பெண்களும் வாரத்திற்கு ஒருமுறை எண்ணை குளியல் செய்வது சிறந்தது. இந்த எண்ணைக்குளியலை முறைப்படி மேற்கொள்வதால் உடல் குளிர்ச்சி அடைவதோடு, ஏற்கனவே உடலில் இருந்த பாதிப்புகளை போக்கி உடலை ஆரோக்கியமாக வைக்கிறது. உடல் மற்றும் மன இறுக்கங்களை போக்கி தளர்வடைய செய்கிறது.

# மதுரையில் 3 நாட்கள் போக்குவரத்து மாற்றம்!









மதுரை, ஏப். 27–

புகழ்பெற்ற மதுரை சித்திரை திருவிழா நடந்து வருகிறது. விழாவில் மீனாட்சி அம்மன் திக்கு விஜயம், மீனாட்சி திருக்கல்யாணம், தேரோட்டம் ஆகிய வைபவங்கள் இன்று முதல் நாளைமறுநாள் (புதன்கிழமை) வரை நடக்கிறது. இதனையொட்டி, மாநகர பகுதிகளில் போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்து போலீசார் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

மதுரை மாநகர பகுதிகளில், இன்று மினி வேன் போன்ற சரக்கு வாகனங்கள் பகல் நேரத்தில், வழக்கம்போல் அனுமதிக்கப்பட்ட நேரத்தில் வந்து செல்லலாம். ஆனால், இரவு 10 முணி முதல் நாளை (செவ்வாய்க்கிழமை) மதியம் 3 மணி வரை நான்கு ஆவணி மூலவீதிகளிலும் எந்த ஒரு சரக்கு வாகனங்களும் வந்து செல்ல அனுமதி இல்லை.

இதுபோல மாசி வீதிகளில், கீழமாசி வீதியில் திக்கு விஜயம் நிகழ்ச்சி நடைபெறும் நேரத்தில் எந்த ஒரு சரக்கு வாகனத்திற்கும் வந்து செல்ல அனுமதி இல்லை. மற்ற மாசி வீதிகளில் இன்று இரவு முதல் நாளை அதிகாலை 2 மணி வரை சரக்கு வாக னங்கள் வந்து செல்லலாம். இது தவிர, நான்கு ஆவணி மூல வீதிகளில் இன்று இரவு 10 மணி முதல் நாளை மதியம் 2 மணி வரை பொதுமக்களின் எந்த ஒரு வாகனமும் நிறுத்துவதற்கு அனுமதி இல்லை.

மீனாட்சி அம்மன் தேரோட்டத்தையொட்டி, கோவிலை சுற்றியுள்ள நான்கு மாசி வீதிகளிலும் நாளை இரவு 10 மணி முதல் மறுநாள் தேரோட்டம் முடியும் வரை இரு சக்கர வாகனங்கள் உள்பட எந்த ஒரு வாகனமும் நிறுத்த அனுமதி இல்லை. நாளை மறுநாள் பகல் முழுவதும் கீழமாசி வீதி, கீழமாரட் வீதியில் எந்த ஒரு வாகனங்களும் வந்து செல்ல அனுமதி இல்லை. மற்ற மாசி வீதிகளில் அனுமதிக்கப்பட்ட நேரத்தில் வாகனங்கள் அனுமதிக்கப்படும்.

தேரோட்டத்தைக் காண வரும் பக்தர்கள் தங்களது வாகனங்களை நான்கு மாரட் வீதிகளில் பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் எவ்விதமான இடையூறுமின்றி நிறுத்திக்கொள்ளலாம். வாகன நிறுத்தத்தை பொறுத்தமட்டில், இன்று இரவு 11 மணி முதல் ஆவணி மூல வீதிகளில் வாகனங்கள் செல்லவோ, நிறுத்தம் செய்யவோ அனுமதி கிடையாது. மேலும், வாகனங்களை நாளை காலை 6 மணி முதல் நிறுத்துவதற்கு அனுமதி சீட்டு வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, மஞ்சள் நிற அனுமதி சீட்டு வைத்திருப்பவர்கள், மேல ஆவணி மூல வீதி பகுதியிலும், இளஞ்சிவப்பு (ரோஸ்) நிற அனுமதி சீட்டு வைத்திருப்பவர்கள், வடக்கு ஆவணி மூல வீதி பகுதிகளிலும், நீல நிற அனுமதி சீட்டு வைத்திருப்பவர்கள் தெற்கு ஆவணி மூல வீதி பகுதிகளிலும் தங்களது வாகனங்களை நிறுத்தி கொள்ள வேண்டும். கீழ ஆவணி மூல வீதயில் வாகனங்கள் நிறுத்த அனுமதி கிடையாது.

இதுபோல, திருக்கல்யாணத்திற்கு வருபவர்களில், கார், இருசக்கர வாகன அனுமதி சீட்டு இல்லாதவர்கள், தங்களது வாகனங்களை கிழக்கு, தெற்கு மற்றும் வடக்கு மாசி வீதிகளில் போக்குவரத்திற்கும், பாதசாரிகளுக்கும் இடையூறு ஏற்படுத்தாத வகையில் நிறுத்தம் செய்ய வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# திருவண்ணாமலையில் சித்ரா பவுர்ணமி கிரிவலம் செல்ல உகந்த நேரம் அறிவிப்பு!



திருவண்ணாமலை, ஏப். 27–


திருவண்ணாமலையில் மலையை சிவனாக வழிபடுவதால் அருணாசலேஸ்வரர் கோவில் பின்புறம் உள்ள மலையை சுற்றி பவுர்ணமி உள்ளிட்ட விசேஷ நாட்களில் 14 கிலோ மீட்டர் தொலைவு கொண்ட கிரிவலப்பாதையில் லட்சக்கணக்கான பக்தர்கள் கிரிவலம் செல்வார்கள். இதில் கார்த்திகை தீபத் திருவிழாவின் போது மகா தீபம் ஏற்றப்படும் நாளிலும், சித்ரா பவுர்ணமி அன்றும் 30 லட்சத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் கிரி வலம் செல்வார்கள்.

இந்த நிலையில், இந்த ஆண்டுக்கான சித்ரா பவுர்ணமி கிரிவலம் செல்ல உகந்த நேரத்தை கோவில் நிர்வாகம் அறிவித்துள்ளது. அதன்படி சித்ரா பவுர்ணமி வருகிற 30–ந் தேதி (வியாழக்கிழமை) இரவு 9.52 மணிக்கு தொடங்கி மறுநாள் மே 1–ந் தேதி (வெள்ளிக்கிழமை) இரவு 11.08 மணிக்கு நிறைவடைகிறது. இந்த நேரத்தில் கிரிவலம் செல்லலாம் என கோவில் நிர்வாகம் அறிவித்துள்ளது.

இந்த ஆண்டும் சித்ரா பவுர்ணமியின் போது 30 லட்சத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் கிரிவலத்திற்கு வருவார்கள் என்று மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் எதிர்பார்க்கப்படுகிறது. அதனால் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் பொதுமக்கள் மற்றும் பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் மேற்கொள்ளும் பணியில் அதிகாரிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

# திமுக, அதிமுக, தவெகவின் தேர்தல் கணக்கு!!






சென்னை, ஏப். 27–

தமிழகம், கேரளா, அசாம், மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களுக்கும், புதுச்சேரி யூனியன் பிரதேசத்திற்கும் கடந்த மாதம் (மார்ச்) 15–ந் தேதி சட்டசபை தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டது. அதன்படி, கடந்த 9–ந் தேதி கேரளா, அசாம், புதுச்சேரியில் வாக்குப்பதிவு நடந்து முடிந்துள்ளது.

தமிழகத்தில் கடந்த 23–ந் தேதி வாக்குப்பதிவு நடந்தது. அதே நாளில், மேற்கு வங்காள மாநிலத்தில் உள்ள 152 தொகுதிகளுக்கு முதற்கட்டமாக வாக்குப்பதிவு நடந்தது. 2–வது கட்டமாக, 142 தொகுதிகளுக்கு நாளை மறுநாள் (29–ந் தேதி) வாக்குப்பதிவு நடைபெற உள்ளது. 5 மாநில தேர்தல்களுக்கும் மொத்தமாக மே 4–ந் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெற உள்ளது.

**கணிக்க முடியாத நிலை**

இந்த நிலையில், தமிழக சட்டசபை தேர்தலில் ஜெயிக்கப்போவது யாரு? என்பதை இந்த முறை கணித்து கூற முடியாத நிலை உள்ளது. தி.மு.க. கூட்டணி, அ.தி.மு.க. கூட்டணி, த.வெ.க., நா.த.க. இடையே 4 முனைப்போட்டி நிலவினாலும், ஆட்சி அரியணையில் ஏறப்போவது யார்? என்பதை முன்கூட்டியே சொல்ல முடியவில்லை. ஆனாலும், ஆளுங்கட்சியான தி.மு.க., ஆண்ட கட்சியான அ.தி.மு.க., புதிய வரவான த.வெ.க. ஆகிய கட்சிகள், நாங்கள் தான் ஆட்சி அமைக்கப்போகிறோம் என்று நம்பிக்கையுடன் கூறிவருகின்றன.

**சென்னையில் பெருவெள்ளம்**

ஆளுங்கட்சியான தி.மு.க., 2011, 2016 ஆகிய சட்டசபை தேர்தலில் எப்படி அ.தி.மு.க. தொடர் வெற்றி பெற்று ஆட்சி அமைத்ததோ, அதேபோல், 2021, 2026 தேர்தலில் நாங்கள் (தி.மு.க.) தொடர் வெற்றி பெற்று ஆட்சி அமைப்போம் என்று நம்பிக்கையுடன் இருந்து வருகிறது. சென்னையில் 2015–ம் ஆண்டு பெருமழை, பெருவெள்ளம் ஏற்பட்டது. செம்பரம்பாக்கம் ஏரியை உரிய நேரத்தில் திறந்துவிடாததே இதற்கு காரணம் என்று, ஆளுங்கட்சியாக இருந்த அ.தி.மு.க. மீது குற்றம்சாட்டப்பட்டது.

**திமுக நம்பிக்கை**

ஆனாலும், அடுத்த ஓராண்டில் நடைபெற்ற சட்டசபை தேர்தலில் இது எதிரொலிக்கவில்லை. அ.தி.மு.க.வே மீண்டும் வெற்றி பெற்றது. அந்தத் தேர்தலில், மக்கள் நலக் கூட்டணி என்ற 3–வது அணி வாக்குகளை பிரித்தது, ஆளுங்கட்சியான அ.தி.மு.க.வின் வெற்றியை எளிதாக்கியது என்று கூறப்படுகிறது.

அதுபோன்ற நிலையே இந்தத் தேர்தலிலும் நடக்கும் என்று ஆளுங்கட்சியான தி.மு.க. நம்பிக்கொண்டு இருக்கிறது. அதாவது, 2016 தேர்தலில் மக்கள் நலக் கூட்டணி வாக்குகளை பிரித்ததுபோல், இந்த முறை விஜய் கட்சியான தமிழக வெற்றிக் கழகம் வாக்குகளை பிரிக்கும். அது நமக்கு (தி.மு.க.) வெற்றி வாய்ப்பை தரும் என்று உறுதியாக நம்பிக்கொண்டு இருக்கிறது.

**அதிமுகவின் நம்பிக்கை இதுதான்**

ஆண்ட கட்சியான அ.தி.மு.க.வோ, 2011 சட்டசபை தேர்தலின்போது, ஆளுங்கட்சியான தி.மு.க. மீது மக்களுக்கு இருந்த வெறுப்பு, தங்களுக்கு (அ.தி.மு.க.) வாக்குகளை அள்ளிக்கொடுத்து வெற்றியை தேடித்தந்தது. அதுபோன்ற நிலையே இந்தத் தேர்தலிலும் தொடரும் என்று நம்பிக்கை தெரிவிக்கிறது.

காரணம், தி.மு.க. மீது மக்கள் கடும் அதிருப்தியில் இருப்பதாக கூறிவருகிறது. அதற்கு ஆதாரமாக, 2011–ம் ஆண்டு தேர்தலில் 78.22 சதவீத வாக்குகள் பதிவாகி புதிய சாதனை படைத்தது போல், இந்த முறை 85.15 சதவீத வாக்குகள் பதிவாகி வரலாற்று சாதனை படைத்துள்ளதையும் காரணமாக கூறிவருகிறது.

**விஜய் கட்சி என்ன சொல்கிறது?**

சட்டசபை தேர்தலுக்கு புது வரவான நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகமோ, 1967, 1977–ம் ஆண்டு தமிழக சட்டசபை தேர்தலின்போது, ஆட்சியாளர்கள் மீது மக்களுக்கு இருந்த அதிருப்தி அலைபோல், இந்த முறையும் அலை ஏற்பட்டுள்ளதாகவும், அது புதிய கட்சிக்கே வெற்றி வாய்ப்பை கொடுக்கும் என்று நம்பிக்கொண்டு இருக்கிறது.

அதாவது, 1967–ம் ஆண்டு காங்கிரஸ் ஆட்சி முடிந்து தி.மு.க. ஆட்சிக்கு வந்ததுபோல், 1977–ம் ஆண்டு தி.மு.க. ஆட்சி முடிவுக்கு வந்து அ.தி.மு.க. ஆட்சி அரியணையில் ஏறியதுபோல், இந்த முறை த.வெ.க. ஆட்சியை பிடிக்கும் என்று அக்கட்சி நம்பிக்கொண்டு இருக்கிறது.

**ஜெயிக்கப்போவது யாரு?**

தற்போது, தி.மு.க., அ.தி.மு.க., த.வெ.க. ஆகிய 3 கட்சிகளுமே சட்டசபை தேர்தலில் வெற்றி பெற்றால், எந்த தேதியில் பதவியேற்பு விழாவை நடத்துவது?, யார் யாருக்கு அமைச்சரவையில் இடம் கொடுப்பது? என்றெல்லாம் பட்டியல் தயாரிக்க ஆரம்பித்து விட்டனவாம். எது எப்படியோ, மே 4–ந் தேதி வாக்கு எண்ணிக்கை முடிவு வெளியாகும் போது, ஜெயிக்கப்போவது யாரு? என்பது உறுதியாகிவிடும்.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு,
மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல்
சர்வீஸ் உள்ளது
சென்னை
Ph: 98659 88881


# வேலை வாய்ப்பு

## மின்சாரத் துறையில் வேலை 660 காலியிடங்கள் | ITI, Diploma, Degree | ₹ 24,000 சம்பளம்!




Power Grid Corporation of India Limited (PGCIL) நிறுவனம் 2026ஆம் ஆண்டிற்கான புதிய வேலைவாய்ப்பு அறிவிப்பை வெளியிட்டுள்ளது. மத்திய அரசு நிறுவனத்தில் பணியாற்ற விரும்புபவர்களுக்கு இது ஒரு சிறந்த வாய்ப்பாகும். மொத்தம் 660 காலியிடங்களுடன் Diploma Trainee, Junior Officer Trainee மற்றும் Junior Technician Trainee உள்ளிட்ட பதவிகள் அறிவிக்கப்பட்டுள்ளன. தகுதியானவர்கள் 20.04.2026 முதல் 11.05.2026 வரை ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்கலாம்.

நிறுவனம் Power Grid Corporation of India Limited (PGCIL)
வகை மத்திய அரசு வேலை
காலியிடங்கள் 660
பணியிடம் இந்தியா முழுவதும்
ஆரம்ப தேதி 20.04.2026
கடைசி தேதி 11.05.2026

1. பதவி: Diploma Trainee
சம்பளம்: மாதம் Rs.24,000 1,08,000/–
கல்வி தகுதி: Diploma in Civil /Electrical/ Electrical (Power)/ Electrical and Electronics/ Power Systems Engineering/ Power Engineering (Electrical) /Survey Engineering

2. பதவி: Junior Officer Trainee
சம்பளம்: மாதம் Rs.24,000 1,08,000/–
கல்வி தகுதி: BBA/ BBM/ BBS/ CA/ CMA

3. பதவி: Junior Technician Trainee
சம்பளம்: மாதம் Rs.21,000 72,000/–
கல்வி தகுதி: ITI (Surveyor)

வயது வரம்பு: 18 முதல் 27 வயது வரை
விண்ணப்ப கட்டணம்:
Diploma Trainee, Junior Officer Trainee பதவிக்கு
ST/ SC/ Ex–s/ PWD கட்டணம் இல்லை
Others Rs.300/–
Junior Technician Trainee பதவிக்கு
ST/ SC/ Ex–s/ PWD கட்டணம் இல்லை
Others Rs.200/–

**தேர்வு செய்யும் முறை:**

Diploma Trainee பதவிக்கு
Written Test / Computer Based Test
Junior Officer Trainee பதவிக்கு
Written Test / Computer Based Test
Computer Skill Test
Junior Technician Trainee பதவிக்கு
Written Test / Computer Based Test
Trade Test

**முக்கிய தேதிகள்:**

விண்ணப்பிக்க ஆரம்ப தேதி: 20.04.2026
விண்ணப்பிக்க கடைசி தேதி: 11.05.2026

**விண்ணப்பிக்கும் முறை:**

விண்ணப்பதாரர்கள் www.powergrid.in இணையதளம் மூலம் ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம் அல்லது கீழே கொடுக்கப்பட்டுள்ள லிங்கை கிளிக் செய்து ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம்.

**குறிப்பு:** விண்ணப்பிப்பதற்கு முன்பு அதிகாரப்பூர்வ அறிவிப்பில் குறிப்பிடப்பட்டிருக்கும் தகுதி அனைத்தும் தங்களிடம் இருக்கிறதா என உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

# பழனி முருகன் மலைக் கோயிலில் அமைச்சர் சேகர் பாபு சாமி தரிசனம்!



பழனி, ஏப். 27–

பழனி முருகன் மலை கோயிலுக்கு நேற்று தமிழக இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு தனது மனைவியுடன் வருகை புரிந்தார். ரோப் கார் மூலம் சென்ற அவர் மலைக் கோயிலில் முருகப்பெருமானை பயபக்தியுடன் சாமி தரிசனம் செய்தார். பின்பு போகர் சன்னதியில் தரிசனம் செய்தார். பின்பு பழனி அடிவாரத்தில் உள்ள வனதுர்க்கை அம்மன் கோயில், மகிஷாசுரமர்த்தினி அம்மன் கோயில், மற்றும் திருஆவினன்குடி முருகன் கோயில் ஆகிய கோயில்களிலும் சாமி தரிசனம் செய்தார். பின்பு நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் அமைச்சர் சேகர்பாபு பாபு கூறியதாவது முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்ற குரல் கவர்னர் மாளிகையில் 2வது முறையாக ஒலிக்கும் இவ்வாறு அவர் கூறினார். இதில் அறங்காவலர் குழு தலைவர் கே எம் சுப்பிரமணியன் பங்கேற்றார்.




# எல்.பி.ஜி. டேங்கர் லாரிகள் வேலைநிறுத்தம் - கியாஸ் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம்!

சென்னை, ஏப். 27–

ஐ.ஓ.சி நிறுவன உயர் அதிகாரிகளுக்கு தென் மண்டல எல்.பி.ஜி கியாஸ் டேங்கர் லாரி உரிமையாளர்கள் சங்கம் சார்பில் நிலுவையில் உள்ள வாடகை பாக்கியை தராவிட்டால் போராட்டத்தில் ஈடுபட போவதாக இ–மெயில் மூலம் கடிதம் அனுப்பி இருந்தது.



அதன்படி இன்று ஐ.ஓ.சி. நிறுவனம் வாடகை பாக்கியை வழங்காததால் இன்று காலை முதல் ஐ.ஓ.சி. நிறுவனத்திற்கு இயக்கப்படும் 1,000 எல்.பி.ஜி. கியாஸ் டேங்கர் லாரிகள் லோடு ஏற்றாமல் ஆங்காங்கே நிறுத்தப்பட்டு தொடர்ந்து எல்.பி.ஜி கியாஸ் டேங்கர் லாரி உரிமையாளர்கள் சங்கம் போராட்டத்தில் ஈடுபட்டு ள்ளது. இந்த தகவலை தென் மண்டல எல்.பி.ஜி கியாஸ் டேங்கர் லாரி உரிமையாளர்கள் சங்க தலைவர் சுந்தர்ராஜன் தெரிவித்தார்.

ஏற்கனவே அமெரிக்கா, ஈரான், இஸ்ரேல் போர் காரணமாக சமையல் எரிவாயு தட்டுப்பாடு நிலவி வருகிறது. இந்த சூழலில் எல்.பி.ஜி டேங்கர் லாரி வேலைநிறுத்தம் காரணமாக தென் மாநிலம் முழுவதும் சிலிண்டர் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் நிலை உருவாகியுள்ளது.

# நீட் நுழைவுத்தேர்வு ஹால் டிக்கெட் வெளியீடு!

டெல்லி. ஏப். 27–

இளநிலை மருத்துவப் படிப்புக்கான நீட் நுழைவுத் தேர்வு ஹால் டிக்கெட் தேசிய தேர்வு முகமையின் அதிகாரப்பூர்வ இணையதளமான neet.nta.nic.in–ல் வெளியானது. நீட் தேர்வர்கள் தங்களது விண்ணப்ப எண், பிறந்த தேதியை பயன்படுத்தி ஹால் டிக்கெட்டை பதிவிறக்கம் செய்யலாம்



# விஜய் வேட்புமனுவை ஆய்வு செய்ய கோரிய மனு தள்ளுபடி!

சென்னை, ஏப். 27–

தவெக தலைவர் விஜய் தாக்கல் செய்த வேட்புமனுவை ஆய்வு செய்ய கோரிய மனுவை சென்னை ஐகோர்ட் தள்ளுபடி செய்தது.



தவெக தலைவர் விஜய், சென்னை பெரம்பூர், திருச்சி கிழக்கு ஆகிய இரு தொகுதிகளில் போட்டியிட்டார். வேட்பு மனுவில், மனைவிக்கு ரூ.12.60 கோடி கடன் கொடுத்ததாக விஜய் கூறி இருந்தது குறித்து ஆய்வு செய்யக்கோரி, பெரம்பூர் தொகுதி வாக்காளர் வெங்கடேஷ் என்பவர் சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்தார்.

அவர் மனுவில், ''வேட்பு மனுவில் உண்மை விவரங்களை மறைப்பது தேர்தல் நடைமுறையை மோசடி செய்வதை போன்றது" என குறிப்பிட்டு இருந்தார். இந்த வழக்கு இன்று ஐகோர்ட் தலைமை நீதிபதி தலைமையிலான அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது. மனுவை விசாரித்த சென்னை ஐகோர்ட் தள்ளுபடி செய்து உத்தரவிட்டது. இதே கோரிக்கைகளுடன் தாக்கல் செய்யப்பட்ட முந்தைய வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதால், இந்த வழக்கை விசாரணைக்கு ஏற்க முடியாது என ஐகோர்ட் தள்ளுபடி செய்தது.

அதேபோல், ஜெயக்குமார், சி.வி. சண்முகம் ஆகியோருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுக்களையும் நீதிபதிகள் தள்ளுபடி செய்தனர்.

# வாட்ஸ் அப்புக்கு போட்டியாக எக்ஸ் சேட்.. எலான் மஸ்க் களமிறக்கிய புதிய செயலி!

வாஷிங்டன்,ஏப். 27–

வாட்ஸ் அப்புக்கு போட்டியாக எக்ஸ் சேட் என்ற சமூக வலைத்தள செயலியை எலான் மஸ்க் அறிமுகம் செய்துள்ளார். ஐபோன் பயனர்களுக்காக இந்த எக்ஸ் சேட் செயலி தற்போது அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. மெசேஜிங் சேவைகளுக்காக மட்டும் இந்த எக்ஸ் சேட் இருக்கும் என்று அந்த நிறுவனம் கூறியுள்ளது.



எண்ட் டு எண்ட் என்கிரிப்ஷன் தொழில்நுட்பத்துடன் உருவாக்கப்பட்டுள்ள இந்த மெசேஜ் செயலி பயனர்களின் தனியுரிமையை பாதுகாக்கும் எனவும், பயனர்களின் தனிப்பட்ட உரையாடலை நிறுவனம் உள்பட மூன்றாம் தரப்பால் பயன்படுத்த முடியாது எனவும், விளம்பரங்கள் மற்றும் பயனர்களை கண்காணிக்கும் எந்த டிராக்கிங் அம்சமும் இதில் இருக்காது; தொலைபேசி எண்கள் இல்லாமல் ஏற்கனவே உள்ள எக்ஸ் கணக்கை வைத்தே லாக் இன் செய்ய முடியும் என்று தெரிவித்துள்ளது.

ஆடியோ மற்றும் வீடியோ வசதி உள்ளிட்ட வசதிகளும் இதில் இடம் பெற்றுள்ளன. இந்த செயலி விரைவில் ஆண்ட்ராய்டுகளுக்கும் அறிமுகமாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. குறுஞ்செய்தி அனுப்பும் சமூக வலைத்தளங்களில் பெரும் ஆதிக்கம் செலுத்தி வரும் வாட்ஸ் அப்புக்கு கடும் சவாலாக இந்த செயலி இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# இறுதி ஊர்வலங்களை வரைமுறைப்படுத்த புதிய சட்டம்....?

மதுரை, ஏப். 27–

தமிழ்நாட்டில், மறைந்தோர் இறுதி ஊர்வலங்களின் போது ஏராளமான பிரச்சினைகள் ஏற்படுகிறது. குறிப்பாக சென்னை போன்ற நகர்ப்புறங்களில் நடைபெறும் இறுதி ஊர்வலங்களின்போது, கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதுடன், இறுதி ஊர்வலங்களில் கலந்துகொண்டு ஆடும் சிலரின் அலப்பறை மற்றும் இறுதி ஊர்வலத்தில் போது, பிணத்துடன் எடுத்து செல்லுப்படும், பூக்களை பொதுமக்கள் மீது வீசி எறிவது போன்றவற்றால் அவ்வப்போது சண்டை சச்சரவுகளும் ஏற்பட்டு வருகின்றன.



இதன் காரணமாக, இறுதி ஊர்வலத்தில் கடைபிடிக்க வேண்டியது குறித்து, தமிழ்நாடு காவல்துறை (DGP) ஏற்கனவே சிறப்பு வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது. இருநதாலும், அதை பொதுமக்களும் கடைபிடிப்பது இல்லை, காவல்துறையினரும் கண்டுகொள்வது இல்லை.

இந்த நிலையில், 2025ம் ஆண்டு மார்ச் 5ந்தேதி அன்று கல்லூரி மாணவிகள் 25 பேர் பயணம் செய்த கல்லூரிப்பேருந்துமீது, இறுதி ஊர்வலத்தில் சென்றவர்கள் சில, பூக்களை வீசி எறிந்ததுடன்,போதையில் பேருந்தை நிறுத்தி மாணவிகளிடம் ஆபாசமாகப் பேசி சர்ச்சையை ஏற்படுத்தியதுடன், அந்த பேருந்தின் ஓட்டுநரையும் தாக்கி பேருந்தை சேதப்படுத்தினர்.

இதுதொடர்பான புகாரின் பேரில் வழக்கு பதிவு போலீஸார் சங்கர், அஜித்குமார், சந்திரபோஸ் உள்பட பலர் மீது வழக்குப் பதிவு செய்தனர்.

இந்த வழக்கில் கைது, சம்பந்தப்பட்ட 3 பேரும், முன்ஜாமீன் கோரி மூவரும் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் மனு தாக்கல் செய்தனர். இந்த மனுவை விசாரித்த நீதிபதி கே.கே. ராமகிருஷ்ணன் , மது போதையில் இருந்தவர்கள் மாணவிகளிடம் நடந்துகொண்ட செயலை சாதாரணமாகக்கருத முடியாது.

இறுதி ஊர்வலங்களில் பங்கேற்பது ஒரு சமூக மற்றும் கலாச்சார நடைமுறையாக இருந்தாலும், அது பொது பாதுகாப்புக்கு ஆபத்தை விளைவிக்கவோ, வன்முறை அல்லது ஒழுங்கீனச் செயல்களில் ஈடுபடவோ காரணமாக இருக்கக்கூடாது. அதனால், புகார் குறித்து, மனுதாரர்களை காவலில் எடுத்து விசாரிக்க வேண்டும். அவர்களின் முன்ஜாமீன் மனுக்கள் தள்ளுபடி செய்யப்படுகின்றன என்று உத்தரவிட்டார்.

மேலும், கடலூரில் இறுதி ஊர்வலத்தில் சென்றவர்கள் வீசிய மாலையால் பொறியாளர் ஒருவர் விபத்தில் சிக்கி உயிரிழந்தது தொடர்பாக உயர் நீதிமன்றம் தாமாக முன்வந்து விசாரித்து பல உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளது என்பதை சுட்டிக்காட்டியவர், இறுதி ஊர்வலங்களை ஒழுங்குபடுத்த புதிய சட்டத்தை இயற்றுவது குறித்து ஆராய தலைமைச் செயலருக்கு உத்தரவிடப்படுகிறது.

இது தொடர்பாக ஜூலை 31–க்குள் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும்.

விசாரணை ஜூலை 31–க்கு தள்ளிவைக்கப்படுகிறது

# அதிகரிக்கும் வெப்ப அலை: அரசு மருத்துவமனைகளில் ஓ.ஆர்.எஸ். கரைசல் வழங்க உத்தரவு!

சென்னை, ஏப். 27–

தமிழ்நாட்டில் நாளுக்கு நாள் கோடை வெயிலின் தாக்கம் அதிகரித்து வருகிறது. இந்நிலையில், அதிகரிக்கும் வெப்ப அலையால் பொதுமக்களுக்கு நீர்ச்சத்து இழப்பு ஏற்படுவதை தடுக்க பொது சுகாதாரத்துறை பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்களில் பொதுமக்களுக்கு இலவசமாக ஓ.ஆர்.எஸ். கரைசல் வழங்க சுகாதாரத்துறை உத்தரவிட்டுள்ளது. அதேபோல், நகர்ப்புற சுகாதார நிலையங்கள், மாநகராட்சி சுகாதார நிலையங்களிலும் ஓ.ஆர்.எஸ். கரைசல் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.



அனைத்து பொது மருத்துவமனைகளிலும் வெயில் பாதிப்பு சிகிச்சைக்காக 'ஹீட் ஸ்ட்ரோக்' என்ற சிறப்பு வார்டு அமைக்க அமைக்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும், ஹீட் ஸ்ட்ரோக் உயிரிழப்புகளை தடுக்க மாவட்ட சுகாதாரத்துறை அலுவலர்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# வார தொடக்க நாளில் உயர்ந்த தங்கம் விலை!



சென்னை, ஏப். 27–

வாரத் தொடக்க நாளான இன்றும் தங்கம் விலை உயர்ந்துள்ளது. அதன்படி, சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு 240 உயர்ந்து சவரன் ரூ.1,13,840–க்கு விற்பனை செய்யப்படுகிறது. அதாவது, ஆபரணத் தங்கத்தின் விலை கிராமுக்கு 30 உயர்ந்து சவரன் ரூ.14,230–க்கு விற்பனை செய்யப்படுகிறது. சென்னையில் வெள்ளி விலையில் மாற்றமின்றி ரூ.270க்கு ஒரு கிலோ ரூ.2.70 லட்சத்திற்கு விற்பனை செய்யப்படுகிறது.

# எனக்கு நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கை சுக்கு நூறாகிவிட்டது - பரபரப்பு வீடியோ வெளியிட்ட அரவிந்த் கெஜ்ரிவால்!

புதுடெல்லி, ஏப். 27–

டெல்லி ஐகோர்ட்டு நீதிபதி ஸ்வரணா காந்தா சர்மாவுக்கு ஆம் ஆத்மி கட்சியின் தேசிய ஒருங்கிணைப்பாளர் அரவிந்த் கெஜ்ரிவால் பரபரப்பான வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார்.அதில்,

நீதிபதி ஸ்வர்ண காந்த சர்மாவிடம் எனக்கு நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கை சுக்கு நூறாகிவிட்டது.

அவர் முன்பு நான் இனி நேரடியாக ஆஜராகியோ, வழக்கறிஞர் வைத்தோ வாதிட மாட்டேன். எனவே, மகாத்மா காந்தியின் சத்தியாகிரக வழியைப் பின்பற்ற நான் முடிவு செய்துள்ளேன்.



எனது மனசாட்சியின் அடிப்படையில் இந்த முடிவை எடுத்துள்ளேன். நீதிபதி ஸ்வரணா காந்தா சர்மாவுக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் முறையிடும் உரிமையை நான் கொண்டுள்ளேன் என அதில் கூறியுள்ளார்.

# விரைவில் வெளியூர் பேருந்து டிக்கெட்டுகளும் 'சென்னை ஒன்' செயலியில் எடுக்கும் வசதி!

சென்னை. ஏப். 27–

வெளியூர் பேருந்துகளுக்கான டிக்கெட்டுகளை 'சென்னை ஒன்' செயலியில் பெறும்வசதிவிரைவில் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக போக்குவரத்துத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.




சென்னை ஒன் செயலியில், வெளியூர் செல்லும் பேருந்துகளுக்கான பயண டிக்கெட் பெறும் வகையில், செயலியில் அப்டேட் செய்யப்பட்டு வருகிறது. இதற்கான பணிகள் நடைபெற்று வருகின்ற நிலையில், அரசு விரைவு போக்குவரத்துக் கழகம், விழுப்புரம் கோட்ட அரசு போக்குவரத்துக் கழகம் ஆகியவற்றின் பேருந்துகளில் பயணிக்கும் வசதியை விரைவில் அறிமுகப்படுத்த போக்குவரத்துத் துறை திட்டமிட்டுள்ளது.

# 7 ஆம் ஆத்மி எம்.பி.க்கள் பாஜகவில் இணைவு!

டெல்லி, ஏப். 27–

ஆம் ஆத்மி கட்சி எம்.பி.க்கள் 7 பேர் பாஜகவில் இணைந்ததை மாநிலங்களவை தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் அங்கீகரித்தார். ராகவ் சத்தா உள்பட 7 எம்.பி.க்கள் ஆம் ஆத்மி கட்சியில் இருந்து பிரிந்து பாஜகவில் இணைந்ததை அங்கீகரித்தார். 7 ஆம் ஆத்மி எம்.பி.க்கள் பாஜகவில் இணைந்ததை தொடர்ந்து மாநிலங்களவையில் அக்கட்சியின் பலம் 113ஆக உயர்ந்தது. 7 எம்.பி.க்களை இழந்த ஆம் ஆத்மி கட்சியின் பலம் 10ல் இருந்து 3ஆக குறைந்தது. 7 எம். பி.க்களையும் தகுதி நீக்கம் செய்ய ஆம் ஆத்மி கட்சி நேற்று துணைக் குடியரசுத் தலைவருக்கு கடிதம் எழுதியிருந்தது.



# மார்ச்சில் உச்சம் தொட்டது மின்சார வாகனங்கள் புக்கிங்; மாற்றத்திற்கு முக்கிய காரணங்கள் இதுதான்!

புதுடெல்லி, ஏப். 27–

மார்ச் மாதத்தில் மின்வாகன புக்கிங் அதிக அளவு நடந்து சாதனை படைத்து இருக்கிறது; இதற்கு பெட்ரோல், டீசல் விநியோக அச்சம் மற்றும் விலை உயர்வு ஆகியவை இம்மாற்றத்திற்கு முக்கியக் காரணங்களாக கருதப்படுகிறது. மத்திய கிழக்கு நாடுகளில் நிலவும் போர் பதற்றம் காரணமாக, எரிபொருட்கள் விநியோக அச்சம் மற்றும் அதிகரித்து வரும் செலவினங்களுக்கு மத்தியில், மார்ச் மாதத்தில் தமிழகத்தில் மின்வாகனப் பதிவுகளில் (EV registrations) ஒரு சாதனை நிகழ்ந்து இருக்கிறது.



ஆர்டிஓ அலுவலக பதிவு தரவுகள் படி, கடந்த மார்ச் மாதத்தில் மட்டும் 27,400 மின்வாகனங்கள் புக்கிங் செய்து பயன்பாட்டுக்கு வந்துள்ளது. இதில், ஐந்தில் ஒரு பங்கு நான்கு சக்கர வாகனங்களாகவும், மீதமுள்ளவை இருசக்கர வாகனங்களாகவும் இருந்தன.

இதற்கு மாறாக, கடந்த ஆண்டு மார்ச் மாதத்தில் 14,239 மின்வாகனங்கள் மட்டுமே பதிவு செய்யப்பட்டன. பதிவுகள் படிப்படியாக உயர்ந்து வருகிறது. அதன் விபரம் பின்வருமாறு:

ஆண்டு (மாதம்)– மின்சார வாகனங்கள் புக்கிங் எண்ணிக்கை

ஜனவரி (2026)– 18,331

பிப்ரவரி (2026)– 17,873

மார்ச் (2026)– 27,412

அதேபோல் பெட்ரோல், டீசல் வாகனங்கள் முன்பதிவு விபரம் பின்வருமாறு:

ஜனவரி (2026)– 2,40,623

பிப்ரவரி (2026)– 2,18,396

மார்ச் (2026)– 2,01,754

எரிபொருள் விநியோகம் குறித்த அச்சம் நிலவி வருவதால், ஜனவரியில் 2.40 லட்சமாக இருந்த பெட்ரோல், டீசல் வாகனங்கள் முன்பதிவு மார்ச் மாதத்தில் 2 லட்சமாகச் சரிந்தன. இது குறித்து வாகன உற்பதியாளர்கள் சங்கத்தினர் கூறியதாவது:

மின்வாகன விற்பனையில் ஏற்பட்டுள்ள இந்த மாற்றத்திற்கு தற்போதையே சூழல் நிலையே காரணமாகும். பெரும்பாலான வாங்குபவர்கள் சென்னை மற்றும் கோவை போன்ற நகர்ப்புறப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள்.

அவர்களில் பல பெண்கள் பஸ் நிலையங்கள் மற்றும் ரயில் நிலையங்கள் போன்ற போக்குவரத்து மையங்களுக்குச் செல்லும் குறுகிய பயணங்களுக்கு பயன்படுத்தவும், குழந்தைகளைப் பள்ளியில் இறக்கிவிடவும் மின்வாகனங்களை தேர்வு செய்கின்றனர்.

ஒவ்வொரு ஆண்டும் போலவே, இந்த ஆண்டும் கோடைக்காலத்தை முன்னிட்டுப் பல மின்வாகனங்களுக்கு சிறப்புச் சலுகை அறிவிக்கப்பட்டு இருக்கிறது. இதுவும் அதிகமான மின்வாகனங்கள் முன்பதிவிற்கு காரணமாகும். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

# ஐஸ்கிரீம் பிரியரா நீங்கள்; உங்களுக்குத்தான் இந்த செய்தி!!

புதுடெல்லி,ஏப். 27–

அமெரிக்கா மற்றும் ஈரான் இடையேயான பதற்றத்தால் உலகளவில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. தற்போது ஐஸ்கிரீம்கள் மற்றும் சாக்லேட்டுகளுக்கு சுவையூட்டவும், அவற்றை தயாரிக்கவும் பயன்படுத்தப்படும் உலர் பழங்கள், முந்திரி, பிஸ்தா போன்ற பருப்பு வகைகளின் விலை உயர்ந்துள்ளதால் நிறுவனங்களின் லாபங்கள் பாதிக்கப்பட்டு உள்ளது.

கோடைகாலத்தில், வியாபாரம் உச்சத்தில் இருக்கும் இந்த வேளையில் மூலப்பொருட்கள் விலை உயர்வு, நிறுவனங்களை கடுமையாக பாதித்துள்ளது. போருக்கு முந்தைய காலத்தில் இருந்ததை விட, இப்போது முந்திரி, பாதாம் போன்ற பருப்பு வகைகள் மற்றும் உலர் பழங்களின் விலை 15–22 சதவீதம் அதிகரித்துள்ளது.



இந்த விலை உயர்வை சமாளிக்க, ஐஸ்கிரீம்கள், சாக்லேட்டுகள் தயாரிக்கும் நிறுவனங்கள் 10 சதவீத விலை உயர்வை ஏற்கனவே அறிவித்துள்ளன. 'போர் காரணமாக, விமானம் மூலம் கொண்டு வரப்படும் சரக்குகளின் செலவுகள் அதிகரிக்கின்றன. இதனால் ; ஐஸ்கிரீம்கள், சாக்லேட்டுகளின் எம்ஆர்பி விலையை அதிகரிப்பதை தவிர வேறு வழியில்லை' என நிறுவன உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020